**சார்பு நீதிமன்றம், திருத்துறைப்பூண்டி**

**MCOP. 17/2023**

2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 05 ஆம் நாள் வியாழன் கிழமை எ.ம.சா.1 இந்திய சாட்சி சட்டத்தின் கீழ் திரு.எம்.மகேஷ், இளநிலை உதவியாளர் அவர்களால் சாட்சியிடம் சத்திய பிரமாணம் செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | துரை | த/பெ.: | சிவகண்ணு |
| கிராமம்: | வேதாரண்யம் | தாலுக்கா: | வேதாரண்யம் |
| மதம்: | இந்து | தொழில்: | ஓட்டுநர், அரசுபோக்குவரத்து கழகம், வேதாரண்யம். |
| வயது: | 56 | முகவரி: | வேதாரண்யம் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of – 1873 on day of 05.03.2026

**<u>முதல் விசாரணை:–</u>**

நான் இந்த மனுவில் எதிர் மனுதாரர் தரப்பு சாட்சி ஆவேன். நான் எனது முதன்மை சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். நான் சொல்லி தான் தயார் செய்யப்பட்டது.

**<u>மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை:-</u>**

விபத்து ஏற்பட்ட சமயத்தில் பேருந்தை நான் தான் ஓட்டுனேன் என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கை என் மீது தான் போடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி விபத்தை குறித்து நான் காவல் நிலையத்தில் புகார் ஏதும் கொடுக்கவில்லை என்று சொன்னால் சரிதான். இந்த விபத்து ஏற்படுத்திய குற்றசாட்டிற்காக என் மீது எங்கள் நிறுவாகத்தில் குறிப்பாணை

கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான். என் மீது போடப்பட்ட குற்ற வழக்கு தற்போது எந்த நிலையில் உள்ளது என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. நான் இந்த விபத்து சம்பந்தமாக குற்றவியல் நடுவர் நீதிமன்றம் சாட்சி சொல்ல சென்றேனா என்றேனா என்றால் இல்லை. குற்ற அறிக்கையில் எதிரி என்ற காலத்தில் என் பெயர் தான் உள்ளது என்றால் சரிதான். நான் பேருந்தை ஓட்டும் போது பேருந்தின் முன்புறம் உள்ள சாலையை பார்த்து தான் கவனமாக ஓட்டி செல்வேன் என்று சொன்னால் சரிதான். விபத்து ஏற்பட்ட சமயத்தில் நான் ஓட்டி சென்ற பேருந்தில் சுமார் எத்தனை பயணிகள் இருந்தார்கள் என தெரியுமா என்றால் கூட்டம் அதிகமாக இருந்தது. நிறைய பயணிகள் இருக்கைகள் இல்லாததால் நின்று கொண்டு பயணம் செய்து வந்தார்கள். இந்த வழக்கின் மனுதாரர் பேருந்தின் பின் பக்க படிக்கட்டில் பயணம் செய்து இறங்கினார் என்றால் சரிதான். நான் பேருந்தை முன் திசையை நோக்கி கவனமாக ஓட்டி செல்லும் போது பின்பக்க கதவு வழியாக இறங்கும் பயணிகள் பற்றி என்னால் பார்க்கமுடியாது என்று சொன்னால் சரிதான். மனுதாரர் பேருந்தின் பின்பக்கம் கதவு வழியாக இறங்குவதற்கு முன்பாகவே நான் பேருந்தை எடுத்துவிட்டேன் அதனால் மனுதாரர் கீழே விழுந்து அடிப்பட்டு விட்டது என்றால் சரியல்ல. மனுதாரர் பேருந்து நிறுத்தம் வருவதற்கு முன்பாகவே கீழே இறங்கி விட்டதால் அவருக்கு அடிப்பட்டு விட்டது. நான் மனுதாரர் பேருந்து நிறுத்துவதற்கு முன்பாகவே கீழே இறங்கியதால் அடிப்பட்டு விட்டது என்பது குறித்து நான்

காவல் நிலையத்தில் புகார் ஏதேனும் தனிப்பட்ட முறையில் கொடுத்தேனா என்றால் இல்லை. இந்த விபத்து என்னுடைய கவனகுறைவாலும், அஜாக்கிரதையால் தான் ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல. மனுதாரருக்கு ஏற்பட்டுள்ள காயத்திற்கு இழப்பீடு தொகையை கொடுப்பதை மறைப்பதற்காக மனுதாரருக்கு எதிராக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. மனுதாரருக்கு இழப்பீடு தொகையை கொடுக்க எங்கள் போக்குவரத்து கழகம் தான் இழப்பீடு தொகை கொடுக்க கடைமைப்பட்டவர் என்று சொன்னால் சரியல்ல. மனுதாரருக்கு எங்கள் போக்குவரத்து கழகம் தான் நஷ்டஈடு தொகை வட்டியுடன் செலுத்த கடைமைப்பட்டவர் என்று சொன்னால் சரியல்ல. எதிர்மனுதாரர் என்னை கேட்டுக்கொண்டதன் பேரில் நான் மனுதாரருக்கு எதிராக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை :– இல்லை</u>**

Typed down to my dictaion, in my Presence and hearing, and under my personal direction and Superintendence and admitted by the witness to be correct.

Subordinate Judge,
Thiruthuraipoondi.